மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த பீடித் தொழிலாளர்கள் சட்டத்தைப் பொறுத்தளவிற்கு தமிழ் நாட்டில் ஏற்கனவே ஒரு சட்டம் இருந்தது. அதை, எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று மத்திய சர்க்கார் ஒரு முயற்சி எடுத்தார்கள். நம் தென் மாநிலங்கள் எல்லாம் கூடிப் பேசினோம். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் சட்டம் போட்டுவிட்டோம். திரு. விநயகம் அவர்கள் சொன்னது உண்மைதான். ஆனால் அதை நிறைவேற்றும்போது நீதிமன்றங் களுக்குச் செல்கிறார்கள். இதிலுள்ள கஷ்டம், பார்டர் ஏரியாக்களில்—இந்தப் பக்கத்தில் கர்நாடக மாநிலம் இருக்கிறது, அந்தப் பக்கத்தில் ஆந்திர மாநிலம் இருக்கிறது—தொழில் புரியும் நம் தொழில் அதிபர்கள் அவர்களுக்குள்ள கஷ்டங்களைச் சொல்கிறார்கள். இந்த மாநிலங்கள் இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். மத்திய அரசை வற்புறுத்தி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டம் இருக்க வேண்டும், அந்தச் சட்டம் கூட நம் தமிழ்நாடு சட்டத்தை ஒத்திருப்பதால் அப்படி அதை ஒரே மாதிரியான சட்டமாக அமல் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். மற்ற மாநில அமைச்சர்களைச் சந்திக்கும்போது கூட அதுபற்றி வற்புறுத்துகிறோம், எப்படியாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று.

கூலிப் பிரச்சினைதான் வேறுபாடாக இருக்கிறது. பக்கத்தி லுள்ள சித்தூரில் வேறுவிதமாக இருந்தால் வேலூரில் உள்ள தொழில் அதிபர்கள் அங்கு செல்ல வேண்டுமென்று சொல்கி றார்கள். சில சமயங்களில் இங்குள்ள அதிபர்கள் அங்கேயும் வைத் திருக்கிறார்கள். இங்கே தொழிலாளர்களைப் பட்டினி போட்டு விட்டு அங்கே தொழில் செய்ய முயற்சி செய்கிறார்கள். ஆக, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் சில சங்கடங்கள் இருக் கின்றன. உயர்நீதி மன்றத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் அச்சட்டத்தை அமல் நடத்த வேண்டாம் என்ற எண்ணமோ அல்லது தொழிலாளர்களுக்குப் பாதகம் செய்யவேண்டும் என்ற எண்ணமோ—திரு. விநயகம் அவர்களுக்கு இருந்தாலும்—எங்களுக்கு இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : It is an insinuation against me. He should withdraw that word.

Supply of boiled rice in Chingleput district

*8 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the people of Kanagam, Tharamani and other neighbouring villages in Chingleput district are put to a lot of inconvenience due to non-supply of boiled rice ; and

(b) if so, the reasons thereof and the action taken thereon?

1970 நவம்பர் 26]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *(அ) 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 18-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி முடிய கானகம், தரமணி மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் புழுங்கல் அரிசி விநியோகிக்கப்படவில்லை என்றாலும், அங்கிருந்த குடும்பக் கார்டு கடைகளுக்குப் பச்சரிசி வழங்கப்பட்டது. அதனால் புழுங்கல் அரிசி வழங்காததால் ஏற்பட்ட கஷ்டம் குறைக்கப்பட்டது.*

(இ) 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் புழுங்கல் அரிசி இருப்பு போதுமானதாக இல்லை. செங்கை மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர் குறுவை நெல்லிலிருந்து புழுங்கலரிசி தயாரிக்கவும், சார்புப் பகுதிகளில் விநியோகிக்கவும் ஏற்பாடு செய்தார்.

DR. H. V. HANDE : Is it not a fact that in these areas, boiled rice which has become spoiled due to wrong method of storage, was supplied? If so, will this Government tell us what is the quantity of boiled rice that was spoiled during one year because of such storage?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *தலைவரவர்களே, அந்தப் பகுதிகளில் நாம் ஏதோ கெட்டுவிட்ட அரிசியைத் தந்து விட்டதாக சொல்லுகிறார்கள். அப்படிக் கொடுத்ததாகத் தகவல் இல்லை. எவ்வளவு அரிசி கெட்டு விட்டது என்று கேட்கிறார்கள். அரிசி கெடுகிற தருவாயில் இருந்ததை எல்லாம் ஏலம் போட்டு விற்றுவிட்டது. கையில் கெட்டு விட்ட அரிசி ஏதுவும் இல்லை. மொத்தம் எவ்வளவு அரிசி கெட்டு விடும் தருவாயில் இருந்தது, எவ்வளவு ஏலம் போட்டோம் என்ற விவரம் கைவசம் இல்லை. கெட்டு விட்ட அரிசியை எங்கும் போடவில்லை. கெடுகிற தருவாயில் இருந்ததை* மு.ப. 9-30 *எல்லாம் ஏலம் போட்டு விற்று விட்டோம்.*

Chingleput Municipality

* 9. *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state—

(*a*) whether the Chingleput Municipal Council has requested the Government in 1970 to upgrade it; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *(அ) ஆம்.*

(இ) செங்கற்பட்டு நகராட்சித் தலைவர் அந்நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக மறுவகைப்பாடு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை நகராட்சி மன்றத்திற்கு அளித்தார். 31—3—1970 நாளிட்ட தனது 496-ஆம் எண் தீர்மானத்தில் அந்நகராட்சி மன்றம் இக்கருத்துரையை ஏற்று அது குறித்து அரசுக்கு எழுதுவதெனவும், தீர்மானத்தின் படிகளை பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்புவதெனவும் அது தீர்மானித்தது. நகராட்சியின் நிதிநிலை குறித்து விவரங்களை